...ered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 39—No. 3

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

...ர் 39 | விசுவாவசு பங்குனி 1966 மார்ச்சு | இதழ் 3

உள்ளுறை


| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| பிரார்த்தனை | ... | 37 |
| கா. ரா. கடைசி நாள் | ... | 43 |
| மாதவிழாக்கள்—பஞ்சபர்வம் | ... | 47 |
| சுந்தரமூர்த்தி நாயனார் மீது கீர்த்தனை | ... | 50 |
| சமாஜத் தேர்வுகளின் பாடத்திட்டம் | ... | 51 |
| சமாஜச் செய்திகள் | ... | 53 |
| மதிப்புரை | ... | 56 |
| சைவ இளைஞர் சைவப் புலவர் | | |
| மாநாட்டுத் தலைமை உரை—அனுபந்தம் | | |


பத்திராசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா. 3 தனிப்பிரதி அணா ...

Reg. M. 2330 உ

சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 39 | விசுவாவசு பங்குனி 1966 மார்ச்சு | இதழ் 3

# பிரார்த்தனை

(ஆசிரியர்)

பல ஆண்டுகளுக்கு முன், சென்னையில் ராஜகோபாலாச்சாரியார் முதல் மந்திரியாயிருந்தபோது, மழையில்லாமல் பயிர்களெல்லாம் காய்ந்தன. என்ன செய்யலாம் என்று எல்லோரும் அவரிடம் விண்ணப்பித்துக் கொண்டார்கள். ''கடவுளைப் பிரார்த்தியுங்கள்'' என்று அவர் விடை கூறி, மேலும் அதற்கு விளக்கம் சொன்னார். ''மக்கள் நெஞ்சில் ஈரம் இல்லாமல் போய்விட்டது. பூமாதேவியும் ஈரம் இழந்து விட்டாள். ஆகவே மக்கள் மனம் உருகிக் கடவுளைப் பிரார்த்தித்து நெஞ்சில் ஈரம் உடையவர்கள் ஆனால், மழையும்பொழியும் நிலமும், ஈரம் உடையதாக ஆகும்'' என்றார். பின்னர் சிலர் உண்மையாகவே மனம் நெகிழ்ந்து இறைவனை வேண்டினார்கள். அற்புதங்கள் இன்னும் நிகழத்தான் செய்கின்றன என்பதற்கு அடையாளமாக, மறுநாளே மழைபெய்து பயிர்களெல்லாம் பிழைத்தன. இது சரித்திரம்; மெய்யாகவே நிகழ்ந்த சம்பவம்.

பிரார்த்தனையே வாழ்க்கையின் நியதியாகக்கொண்டு வாழ்ந்தவர் மகாத்மா காந்தி. ஆண்டவனை வழிபடாமல் எதையும் அவர் செய்ததில்லை; ஆண்டவன் கட்டளை இன்றி எதையும் அவர் தொடங்கியதில்லை. அவரது வாழ்க்கை

யின் தத்துவம் எல்லோருக்கும் நன்கு தெரிந்துள்ளமை யால், இங்கு அவர் சரித்திரம் விளக்கிச் சொல்வது அவசிய மில்லை.

சேலம் சுப்பராய பிள்ளை என்பவர் 80 வயது சென்ற வயோதிகர்; பக்தி நிரம்பியவர். அவருக்குக் கீழேவிழுந்து கால் எலும்பு ஒடிந்துபோயிற்று. காலை வெட்டி எடுத்து விடவேண்டு மென்று டாக்டர்கள் ஒருமுகமாக அபிப் பிராயப்பட்டார்கள். ஆனால் அவர் அதற்கிணங்காமல், ஆண்டவனிடத்தில் பாரத்தைப் போட்டார். தேவார அடங்கன் முறையில் கயிறு சாத்திப் பார்த்தார். திருமா கறல் தேவாரம் வந்தது. உடனே திருமாகறல் சென்று அங்கு ஆண்டவன் சந்நிதியிலே ஆண்டவனைப் பிரார்த் தித்துக்கொண்டு படுத்துவிட்டார். நாட்கள் பல சென் றன. கடவுளருளால் கால் எலும்பு கூடிவிட்டது. இது வும் சரித்திர நிகழ்ச்சி. இவ்வரலாறு சித்தாந்தம் பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது.

எமது நண்பரொருவர் இராமநாத பிள்ளை என்ற பெயருடையவர்; மிகச்சிறந்த பக்தர்; சென்னையில் வாழ் கிறார்; ஆசிரியர் தொழில். கல்யாணம் ஆகி 17 ஆண்டு கள் குழந்தையில்லை. மிக்க மனக் கவலை. 1943 ஆம் வருஷம்: அவர் சென்னையில் ஒரு பெரியவருக்கு அமுது அளித்தார்; அப்பெரியவர் இவர்பால் அருள் கூர்ந்து, "அப்பா நீ திருக்கடவூர் அபிராமி அம்பிகையை வழிபடு. அபிராமி அந்தாதியை நாள்தோறும் பாராயணம் செய். உன் துன்பங்கள் நீங்கி நினைத்த காரியம் கைகூடும்" என்று சொல்லி, அவரிடம் ஓர் அபிராமி அந்தாதிப் புத்த கத்தையும் அளித்துப் போய்விட்டார்.

நண்பரும் அவ்விதமே நாள்தோறும் அந்தாதியைப் பாராயணம் செய்தார். மாதம் ஒருமுறை திருக்கடவூர் அம்பிகைக்கு அர்ச்சனை செய்தார். தாமே அந்தாதிப் பதிப்பு இரண்டுமுறை அச்சிட்டு வெளியிட்டார். காலக் கிரமத்தில் 1945 ஆம் வருஷத்தின் மத்தியில் அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. குழந்தைக்கு அபிராம

குமாரன் என்று பெயர்வைத்தார். பையன் பெரியவனாகி இப்போது பி. ஏ. வகுப்பில் படித்து வருகிறான். அவரும் முன்போல் சிறிதும் நியமந் தவறாமல் அபிராமி வழிபாடும் அந்தாதிப் பாராயணமும் செய்து வருகிறார். இவை நாம் அறிந்தவை. நண்பர் மாம்பலத்தில் இருக்கிறார்; சமாஜ அங்கத்தினர்; யாரும் இச் செய்தியை நேரில் அறியலாம்.

இது மட்டுமன்று, குழந்தைப் பேறில்லாது பெரிய உத்தியோகத்திலிருந்த இருவருக்கு—ஒருவர் சென்னை, பெண்; மற்றவர் ஆடவர், காரைக்கால்—இவர் அபிராமி அந்தாதி பாராயணம் செய்யுமாறும் வழிபடுமாறும் செய்து, அவ்விருவரும் மணமாகி 18–20 வருடங்களுக்குப் பின் புத்திரப் பேறு அடைந்திருக்கிறார்கள். இவை யாவும் நாம் நேரில் அறிவோம்.

எமது மற்றொரு நண்பர் அந்தணச்சான்றோர். அவரும் மனைவியும் தெய்வ பக்தி நிரம்பியவர்கள். அவர்களுடைய மூத்த புதல்வன் எல்லாப் படிப்பும் பதவியும் பொருளும் பக்தியும் நற்பண்புகளும் பெற்றிருந்தும், கல்யாணம் வேண்டாம் என்று பிடிவாதம் செய்ய, இவர்களுக்கு மிக்க வருத்தம். அபிராமி அம்பிகையை வழிபடும்படிக் கூறி, இக்கதைகளை நாம் சொல்ல, அவர்களும் அப்படியே வழிபட, பையனும் மனம்மாறி திருமணம் புரிந்து கொள்ளச் சம்மதித்து பங்குனி மாதம் மணம் நடைபெறவிருக்கிறது.

இத்தகைய வரலாறுகள் நாம் கணக்கின்றிக் கூற முடியும். ஆண்டவனை மனமார வணங்கி வேண்டுவதால் கைகூடாதது எதுவுமில்லை என்பதையே இவை உணர்த்தும். 'கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போல எனக்கு நீ என்று இரங்குவது?' என்று தாயுமானவர் குறையிரக்கிறார். கனிந்த உள்ளத்தோடு வேண்டுவோருக்கு, அனைத்துக்கும் தாயாகிய இறைவன் நிச்சயம் இரங்குவான் என்பதே எல்லா மதங்களின் முடிவுமாகும்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின், அமெரிக்க நாகரிகம் வந்து நம் வாழ்க்கையைக் குலைத்துவிட்டது, இவ்

வளவு குறுகிய காலத்தில் ஏற்பட்ட குலேவு நீண்ட கால பிரிட்டிஷ் ஆட்சியால் ஏற்பட்டதில்லை. முன்னெல்லாம் கடவுட் சிந்தனேயே இந்திய மக்கள் வாழ்க்கையை நெறிப் படுத்திற்று. இதுவரை கூறியவை யாவும் இதற்கு எடுத் துக்காட்டுகளாகும்.

ஆயினும், நம்பிக்கை என்பது ஒன்று தனி. பிறர் சொல்லேயும் அனுபவத்தையும் கேட்டு நம்பிக்கை பிறக்க வேண்டும். தம்முடைய சொந்த அனுபவத்தைக்கொண்டு ஒருவர் நம்பிக்கை பெறுவது என்பது முழுமையும் பொருந் தாது. ஆனல், போலியான பகுத்தறிவு வாதமும் உல கியல் விஞ்ஞான வாதமும் மலிந்துள்ள இன்றைய உலகில் நம்பிக்கை பிறப்பது எளிதன்று. இன்றைய வாழ்க்கை யின் நோக்கம் எல்லாம் அரசியல் துறையிலும் சமூகத் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் கல்வித் துறை யிலும், நாம் அமெரிக்கர் ஆகிவிட வேண்டும் என்பதே. ஏன் என்பதற்குப் பதில் எதுவும் கிடையாது.

எனினும், பொருள் ஈட்டுவதிலும், அதைச் செலவிடு வதிலும், அதிகச் செலவுக்கென்றே வாழ்க்கை முறையை வகுத்துக் கொள்வதிலும், உலக நாடுகள் அனைத்திலும் முன் வரிசையில் நிற்கிற அமெரிக்க நாட்டில், ஆண்டவ னிடத்தே சரண் புகுகின்ற நிலேமையும் மிகுதியாகிக் கொண்டே வருகிறது. உண்மையாகப் பார்த்தால் ஆண்டவனிடம் அடைக்கலம் புகுவதைத் தவிர ஆன்ம கோடிகள் சாதிக்கக் கூடியது சிறப்பாக எதுவுமில்லை. இதுபற்றி உயர்ந்த வாழ்க்கை அமெரிக்க வாழ்க்கையே என்று நம்பியிருக்கின்ற நம்மவருக்கு, அமெரிக்கவாழ்க்கை யிலிருந்து ஓர் உதாரணத்தைக் கூறினல் மனத்தில் நன்கு படும். ஆதலால் அமெரிக்க வாழ்க்கையிலிருந்தே பின் வரும் உதாரணத்தை எடுத்துக் கூறுகிறேம். இது உண் மையான சம்பவம்.

பல ஆண்டுகளுக்கு முன் இளம் பையன் ஒருவன்— வயது 13—பள்ளியிலிருந்து வீட்டுக்கு விரைந்து ஓடிவரு கையில் தடுக்கி விழுந்து காலில் காயம் பட்டது. ஒருசிறு

சிராய்ப்பு: அவ்வளவுதான். பையன் அதைப் பற்றிப் பெரிதாகக் கருதவில்லை. வழக்கம்போல் இரவு உணவு உண்டு படுக்குமுன் கடவுளைத் துதித்துவிட்டுப் படுத்துவிட்டான். மறு நாள் காலையில் எழுந்தான். காலில் வலி, ஆயினும் குடும்பத்தில் எல்லோரும் உடல்வருந்தி உழைப்பவர். ஆதலால், ஐந்து சகோதரர்களோடுகூடத் தானும் கடுமையான வயல் வேலைகளை வழக்கம்போல் அன்றும் செய்தான். எனினும், வலி அதிகமாகி வந்தது. சிறு பிள்ளைத்தனத்தால் இவன் பெற்றோரிடம் அதைச்சொல்லவில்லை.

இரண்டு நாட்கள் கழிந்தன. ஞாயிற்றுக்கிழமை, பெற்றோர் கோவிலுக்குப் போய்விட்டார்கள். இவனுக்கோ வலி பொறுக்க முடியவில்லை. படுத்துவிட்டான். 'ஐயோ பெற்றோருக்குக் காயத்தை முன்னமே அறிவிக்காமல் போனேமே' என்று வருந்தினான். திரும்பிவந்த தாய் பையனைப் பார்த்தாள். நிலைமையை உணர்ந்தாள். டாக்டரை வருவித்தாள். டாக்டர் வந்து பார்த்து முகத்தைச் சுளித்தார். நிலைமை இப்படி இருந்தால் காலைத் துண்டிக்க வேண்டும் என்று சொன்னார். பையன் கேட்டான். உயிர் போனாலும் சரி காலைத் துண்டிக்க வேண்டாம் என்று அலறினான். எனினும், வலியோ பொறுக்க முடியவில்லை. டாக்டர் தாயை அழைத்துத் தனித்துப்பேசினார்.

அப்போது பையன் "அண்ணா" என்று கூவினான். அண்ணன் ஓடிவந்தார். "அண்ணா, எனக்கே புத்திபிசகிப் போனாலும் சரி, என்காலை வெட்டாதே, அப்படி சத்தியம் செய்து கொடு" என்றான். அண்ணனும் அப்படியே சத்தியம் செய்து கொடுத்தான். கொடுத்து, பையன் இருந்த அறை வாயிலில் காவல் நின்று கொண்டான். டாக்டர் வந்தார். 'டாக்டர்! தம்பியின் காலை வெட்ட நான் விடமாட்டேன்" என்றான். டாக்டரும் தாயும் என்ன பேசியும் பயனில்லை. "நான் தம்பிக்குச் சத்தியம் செய்து கொடுத்து விட்டேன். காலை வெட்டுவது முடியாது" என்று கண்டிப்பாய்த் தடுத்துவிட்டான். "இன்று இரவு எப்படி ஆகிறது என்று பார்ப்போமே" என்றார் தகப்ப

ஞர். அக்குடும்பத்தில் ஒருநாளும் பிள்ளைகள் பெற்ருேர் சொல்லுக்கு மறுவார்த்தை பேசியதே இல்லை.

இப்படி இரண்டு நாட்கள் கழிந்தன. ''பிள்ளையை நீங்களே கொல்கிறீர்கள்'' என்று ஆத்திரமாய்ச் சொல்லி விட்டு டாக்டர் போய்விட்டார். பையன் பிழைக்க மாட்டான்—கடவுள் சித்தம் இருந்தாலொழிய என்ற நிலை.

அவர் போன பிறகு, தாயும் தந்தையும் அண்ணனு மாக இரவு முழுமையும் கண்மூடாமல் மாறி மாறிக் கடவுளைத் தொழுதார்கள். அக்குடும்பம் பரம்பரை யாகத் தெய்வபக்தி நிறைந்த குடும்பம். பையனுக்கு நல்ல சுரம். சுரவேகத்தில் பிதற்றிக்கொண்டே இருந்தான். கால் வீங்கிப் புரையோடி முழங்காலைக் கடந்து தொடையை யும் தாண்டி இடுப்பை எட்டிவிட்டது. பெற்ருேரோடு சேர்ந்து மற்ற ஐந்து பிள்ளைகளும் தொழுதார்கள். அதன் மறுநாள் பகலும் இரவும் இப்படியேவிடாமல் தொழுதார் கள். டாக்டர் மறுபடியும் பரிதாபத்தோடு வந்தார். ஆச்சரியம்! வீக்கம் வடிந்திருப்பதுபோல் அவருக்குத் தோன்றிற்று. தம் கண்களையே அவரால் நம்ப முடிய வில்லை.

கீழே விழுந்து மண்டியிட்டுத் தாமும் கடவுளைத் தொழுது நன்றி செலுத்திஞர். பையன் நன்ருய்த் தூங்கி ஞன். பெற்ருேர் பிரார்த்தனையை நிறுத்தவில்லை. மூன்று வாரங்கள் ஆயின. பையன் பூரண செளகரியமாகி எழுந்து நடக்க ஆரம்பித்தான்.

துன்பமுற்றவர்களுக்கு இறைவன் பாதமே புகல் என்ற உண்மையை நன்கு விளக்குகின்ற இந்த அமெரிக் கச் செய்தி உண்மையான சம்பவம். புனைந்துரையன்று. இது 1948 ஆம் வருஷத்து ரீடர்ஸ் டைஜெஸ்ட் என்ற அமெரிக்கப் பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

இந்தப் பையன் யார் என்று அறிய விரும்புவீர்கள் அல்லவா? இவனே சிறந்த அமெரிக்கத் தளபதியும் ஜனதிபதியுமாகப் பிற்காலத்தில் விளங்கிய ஐக்ஐஸன் ஹோவர் என்ற பையன்.

# கா. ராமநாதன் செட்டியார் அவர்களது சுய உணர்வோடு வாழ்ந்த கடைசி நாள்

## (பு. ர. சுவாமிநாதன்-சிதம்பரம்)

சிவத்திரு ஞானியாரடிகள், என் தந்தையார் மறைந்த செய்தி கேட்டு எனக்கு எழுதிய அனுதாபக் கடிதத்தில் அவர்களது கடைசிநாள் எவ்வாறிருந்தது என வினவியிருந் தார். ஆக அந்நாள் ஒருவர் எவ்வாறிருந்தனரோ அதை யொட்டி அவர்களது வாழ்க்கையை எண்ணலாமெனக்கருத இடமிருக்கிறதல்லவா?

சைவப்பெரியார் கா. ரா. அவர்கள் சுய உணர்வோடு வாழ்ந்த கடைசிநாள் என்னுடனும், என் குடும்பத்தாருட னும் தங்கியிருந்த 28-12-1965 ஆகிய செவ்வாய்க்கிழமை யாகும். அன்றைய நாளைப்பற்றி எண்ணும்போதே எனக் கும் என் மனைவி மக்கட்கும் ஆற்றொணுத் துயரம் எங்களை அறியாமலே வருகின்றது. இதைப்பற்றி எழுதவும் வேண் டுமா? இத்தகைய பெரியாரை இழக்கவும் வேண்டிய நிலை எய்திய பின் அந்நாளை நிச்சயமாகச் சிந்திக்க வேண்டிய தொரு நாளாகக் கருதவேண்டியுள்ளது.

27-12-65 என் பள்ளியின் பொன்விழா நாள். விழா மிக்க கோலாகலமாக நடந்துகொண்டிருந்தது. விழாவை வாழ்த்திப் பல தந்திகள் வந்தவண்ணமிருந்தன. ஆதலால் சில தந்திகளைப் பிரிக்காமலே எனது அலுவலர்கள் வைத்துக் கொண்டிருந்தனர்—சில தந்திகளைக் கொடுத்த பெரியார்கள் பெயரை மட்டுங் குறித்து வைத்துக் கொண்டிருந்தனர். இரவு 8-30 மணியளவில் வந்த ஒரு தந்தியைப் பிரித்துப் படித்தபோது செட்டியாரவர்கள் அன்றிரவு 9 மணிக்கு வரும் ஜனதா எக்ஸ்பிரஸில் வருவதாகத் திரு. C. N. சிங்காரவேலு அவர்கள் கொடுத்ததாக இருந்தது. அவசர மாக ஒரு நண்பர் காரில் என் தலைமை அலுவலரை அனுப்பி

அழைத்து வரச்செய்தேன். 9-20க்கு என் பள்ளிக்கு வந்தவர்கள் மிகவுங்களைப்பாக இருப்பதாகவும் வசதியாகப் படுத்துறங்க இடம் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். உடனே எனது வீட்டிற்கே அவர்களை அனுப்பி வைத்தேன். என் மனைவி சா. ரா. அவர்களிடம் பக்தி செலுத்துங்காரணத்தால் சிற்றுண்டி கொடுத்து, ஓய்வுபெற ஏற்பாடு செய்துவிட்டனர். அன்றிரவு 12 மணிக்கு மேல் வீடு திரும்பிய யான் செட்டியாரவர்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருப்பதை யுணர்ந்து, சற்றும் சத்தமின்றி நானும், உறங்கச்சென்றேன்.

மறுநாள் அதிகாலை வழக்கம்போல் "பாவை பாராயணம்" செய்ய 4 மணிக்கு எழுந்து பல் துலக்கச் சென்றபோது குளிக்கும் அறையில் மின் விளக்கெரிந்ததைக் கண்டேன். எனக்குமுன் திரு. செட்டியாரவர்கள் எழுந்து பல் துலக்கிக்கொண்டிருந்தார்கள். என் அறையில் அவர்களும் நானும் திருநீறு தரித்து பக்தி பரவசத்துடன் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை, திருப்பாவை ஆகிய அறுபது பாடல்களையும் பாராயணம் செய்தோம். எவ்வளவு உயர்ந்த பெரியவருடன் அந்தரங்க சுத்தமான ஒரு மகா புருஷனுடன் சேர்ந்து பாராயணம் செய்யும் வாய்ப்புக் கிடைத்ததே என எனக்குள்ளேயே ஒரு சிறந்த உணர்ச்சி பெற்றதை என்னால் சொற்களால் இயம்ப முடியவில்லை!

உடனே தேநீர் பருக விரும்பினார். பருகிய சில நிமிஷங்களின் பின் ஸ்நானம் முடித்தபின் என் ஏழு வயதுடைய பழநி என்ற பையனையும், 9 வயதுடைய மீனா என்ற மகளையும் தம் அருகே அழைத்துப் பல தோத்திரப் பாடல்களை அவர்களுடன் பாடிக்கொண்டு மகிழ்ச்சியுடன் பல கேள்விகளைக்கேட்டுப் பதில் பெற்று, பலவற்றிற்கு விளக்கங்கள் கொடுத்தும் பொழுதுபோக்கினார். எட்டு மணிக்குச் சிற்றுண்டிக்குப்பின் தன்மகள் சில வீடுகட்கப்புறம் வசித்து வந்ததைப் பார்க்கச் சென்றார். அவர்களில்லாமையால்

திரும்பி வந்தவுடன் நடராஜர் ஆலயம்சென்று ஆரவாரமின்றி அமைதியாக எல்லாச் சந்நிதிகளையும், தரிசித்து வீடு திரும்பினார்.

எனது பள்ளியின் பொன்விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு என் பள்ளியையும், மாணாக்கர்களையும் வாழ்த்துமாறு நான் கேட்டுக்கொண்டதற்கு மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டு, பிற்பகல் 3 மணிக்குப் பள்ளிக்கு வருவதாகக் கூறினார். வீட்டில் தங்கி மதியம் 12-30 க்கு விருந்துண்டவுடன் 3 மணிவரை நன்கு ஓய்வுபெற விரும்பி அவ்வாறே அமைதியாக உறங்கினார். 3 மணிக்கு எழுந்து பள்ளிக்குப் புறப்பட்டுவந்தார். அங்கு பள்ளியைச் சுற்றிப் பார்த்த பின் எங்கள் மாணவர் ஏற்பாடு செய்திருந்த பொருட்காட்சியைப் பெரிதும் பாராட்டினார். ஆலயங்களைப் போல் செய்திருந்தவற்றைக் கூர்ந்துகவனித்து 'சிற்பிகளையும் சிருட்டித்துவிட்டீர்களே' என வியந்தார்—கூட்டம் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையில் நடைபெற்றது. சுமார் 4-42 மணி இருக்கும்; எழுந்து பேசுகையில் "படித்ததன் பலன் படிதல்" என்ற சொற்றொடரை விளக்குகையில் பாரிச வாயு தாக்குண்டு கால்களை நீட்டினார் — நல்ல வேளையாக அவருக்கு நேர் பின்னர் நான் நின்றுகொண்டிருந்தேன். அப்படியே தாங்கி அருகிருந்த நாற்காலியில் அமரச் செய்தேன். வாய் குளறியது. சூடாகக் காப்பி அருந்தச் செய்தபின் மீண்டும் உட்கார்ந்தவண்ணம் இரண்டொரு வாக்கியம் பேசி தம் உரையை முடித்துக் கொண்டார். ஒருபுறம் கையும் காலும் சோர்வுற்றன—வியர்த்தது. அடிக்கடி கொட்டாவி விட்டார். உடனே எங்கள் பள்ளிக்கு வெகு அருகிலுள்ள சிறந்த டாக்டராக விளங்கும் திரு. டாக்டர் K. ரங்கசாமிப்பிள்ளையிடம் அழைத்துச்சென்றோம். முழுமையும் பரிசோதித்து தக்க சிகிச்சைகொடுத்து, "மிகவுங்கடினமான வியாதி — ஆண்டவனருள் செய்தால் தான் நலமுறும்" எனக் கூறி உறவினருக்குத் தெரிவிக்குமாறு கூறினார். என்பள்ளி காஸ்பாண்டெண்ட் டாக்டர்

எஸ். எம். லக்ஷ்மணன் செட்டியாரவர்கள் பெரிதும் உதவி புரிந்தார். அண்ணாமலை நகர் ஆஸ்பத்திரியில் அன்றிரவு தங்கவைத்து தக்க மருந்துகள் அளிக்கப்பட்டன. இரவெல்லாம் விழித்திருந்து நெடுந்தொலைபேசி மூலம் அவர்கள் உறவினருடன் தொடர்புகொண்டு மறுநாள் காலை தக்க துணையுடன் இவரை மதுரைக்கு அனுப்பினோம். உடனிருந்து உதவிபுரிந்த எங்களை எல்லாம் பார்த்து உணர்ச்சி ததும்பக் குளறும் நாவினால் நன்றி செலுத்திக்கொண்டேயிருந்தார். தொந்தரவு கொடுத்து விட்டேனே — வருகிறேன்'' என்பதே என்னிடம் அவர் கடைசியாகக் கூறிய வார்த்தைகள். உடனனுப்பிய பணியாளிடமும் பரிவுடன் நன்றி செலுத்தியதாகக் கூறினான்—

என் குடும்பத்திடம் மிகவும்நெருங்கிய அன்புடையவர். எங்கிருந்தோ திடீரென வந்து எங்களுடன் தங்கி என் குழந்தைகளிடமெல்லாம் விளையாடி மகிழ்வித்த அவர், திடீரென மறைந்தது எங்களனைவரையும் ஆறாத்துயரத்தில் அமிழ்த்திவிட்டது. இதுபோல எத்தனை எத்தனை குடும்பங்கள் துயருறுகின்றனவோ!

ஆக அவர்களது சுய உணர்வோடு கூடிய கடைசிநாள் அதிகாலை 4 மணி முதல் ஆண்டவன் அருட்பாக்களை அன்பருடன் ஓதி, தெய்வத்துக்கீடான சிறு குழந்தைகளுடன் தேவாரதிருவாசகப் பாடல்களைக் கூடிப்பாடிக் களித்தபின் ஆகாசலிங்கமாய் அமைந்த தில்லைக் கூத்தன் தரிசனத்தின் பின் அமைதியுடனிருந்து மாலை ஆயிரக்கணக்கான மாணவருக்கும் மற்றவர்க்கும் படியுங்கள் படித்தபின் படிதல் ஏற்படும் அதுவே வாழ்க்கையின் படிப்பு என அறவுரை கூறி அமைதியுற்றார்.

கா. ரா. அவர்கள் பூத உடல், மறைந்ததே யொழிய அன்புள்ளம், புகழ் உடல், தெய்வ மணங்கமழும் இனியமுகம் என்றும் மறையாது; மறையமுடியாது. வாழ்க கா. ரா. அவர்கள்—வளர்க அவர்கள் வளர்த்த சைவம்.

# மாத விழாக்கள் — பஞ்சபர்வம்

## (தி. கி. நாராயணசாமி நாயுடு)

சென்னை பல்லாவரம் ரயிலடிக்குப் பக்கத்தில் திரிசூலம் என்ற ஊர் மூன்று குன்றின் நடுவில் உள்ளது. அவ்வூர் தர்மபுரீசுவரர் கோவிலில் 14 கல் வெட்டுகள் அரசினரால் படி எடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் எண்கள் 311/1901 முதல் 324/1901 வரை ஆகும். அவற்றின் மூலம், முறையே 537 முதல் 550 வரையுள்ள எண்களுடன் தென் இந்திய கல்வெட்டுத் தொகுதி 7-ல் 323—328 ஆம் பக்கங்களில் வெளியாயிற்று. இவை மூலக் கோயிலின் மேற்குச் சுவரில் 2-ம் (537, 540), வடசுவரில் 2-ம் (538, 539), தென் சுவரில் மற்ற 10-ம் உள்ளன. இத்திரிசூலம், திருவடிசூலம் என வழங்குகிற திரு இடைச்சுரம் அன்று. திரிசூலம் பதிகம் பெற்றதல்ல; பாட்டும்(வைப்பு)பெற்றதல்ல. திருவடி சூலம் (திருஇடைச்சுரம்) சம்பந்தர் பதிகம் பெற்றது (1/78 குறிஞ்சி). திரிசூலக் கோயில் தூங்கானை மாடக் கோயில். இராஜ ராஜ தேவர், ராஜேந்திர சோழ தேவர், குலோத் துங்கர் I, விக்ரம சோழ தேவர் முதலியவர்களின் கல் வெட்டுகளை உடையது. இவற்றில் தென் சுவரில் உள்ள 541 (315/1901) ஆம் நீளக் கல்வெட்டே இங்குவிவரிப்பது. அதன் மூலம் வருமாறு :—

ஸ்வஸ்திஸ்ரீ பூமியும் திருவும் தாமேபுணர விக்ரமத்தால் சக்கரம் நடாத்தி வீரசிங்காசனத்து புவனமுழுதுடையா ளொடும்வீற்றிருந்தருளின கோராஜகேசரிவன்மரான உடை யார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு மூன்றுவது (கி. பி. 1073) புலியூர் கோட்டத்துச் சுரத்துநாட்டுச் சோழ திவாகரச் ச(துர்வே)தி மங்கலத்து திருச்சுரமுடையார் சிவப்பிராமணன் கோதமன் உதய திவாகர பட்டனை கலி யாணசுந்தர பட்டனும், ஊர(ன்) பட்டனை தெக்கிணா மூ(ர்)த்தி பட்டனும், உள்ளிட்ட சிவப்பிராமணரோம, செய்பூர் கோட்டத்து செம்பூர் நாட்டு கலிகுளத்து வாயுடை

யான் கோயில் மண்ணைக் கொண்ட சோழ பல்லவராயன் பக்கல் நாங்கள் கொண்ட நெல் நூற்றைம்பதின் கலத்தினால் ஆண்டு வரை கலத்திற்கு முக்குறுணியாக பொலிசையால் வந்த நெல்லு முப்பத்தேழு கலனை தூணிப் பதக்குங் கொண்டு அமாவாசியும் பூர்ணமாசியும் (இரு) அட்டமியும் திருவாதிரையுமாக மாச(ம்) அஞ்சு நாளும் சிறு காலைச்சந் தியிலே திரிச்சுரமுடையார்க்கு பஞ்சகவ்யம் பால் உழக்கும், தயிர்உரியும், நெய்உழக்கும், கோமூத்திரமும், கோமயமும் கொண்டு அபிஷேகம் பண்ணுவித்து திருமஞ்சனஞ் செய் வித்து, திருவாராதனையும் பண்ணிவிக்க கடவோமாகவும். திருவமுது நாநாழி அரிசியுங் கறியமுது இரண்டும், நெய்ய (மு)துந் தயிரமுதும், அடைக்காயமுதுங் கொண்டு அமுது செய்விக்க கடவோமாகவும். நித்தப்படியும் மந்திரபுஷ்பம் சார்த்துவிக்க கடவோமாகவும். இப்படி சந்திராதித்தவரை முட்டாமல் செலுத்தக் கடவோமானோம், இக்கோயில் சிவப்பிராமண ரோம். இவர்கள்பணிக்க எழுதினேன். இவ் வூர் ம(X)சந்த அனந்தன்தூதுவனே. இவை என் எழுத்து.

**விளக்கக் குறிப்பு:** கோயில்களில் ஒவ்வொரு மாத மும் நிகழும் **பஞ்சபர்வத்தை** 'அமாவாசை, பௌர்ணமி, வளர்பிறை, தேய்பிறை, அட்டமிகள், திருஆதிரை நாள்' என விளக்கமாகக் கூறுவது காணலாம். தமிழ்ப்பேரகராதியில் (Lexicon) 'பக்கம் 407-ல் பஞ்சபர்வம்—1. மாதப் பிறப்பு (சங்குரமணம்), 2. தேய்பிறை அட்டமி, 3. தேய் பிறை சதுர்த்தசி (மாதசிவராத்திரி), 4. அமாவாசை, 5. பௌர்ணமி என்று சிவன் கோயிலுக்கும்; 1. மாதப் பிறப்பு, 2. ஏகாதசி, 3. அந்தந்தப் பெருமாளுக்கு உரியதிரு நட்சத்திரம், 4. அமாவாசை, 5. பௌர்ணமி என்று பெரு மாள் கோயிலுக்கும் கூறுகிறது. கல்வெட்டில் வந்த வளர் பிறை அட்டமி, மாத திருஆதிரை நாளை நீக்கி, அகராதியில் மாதப்பிறப்பு நாளும், தேய்பிறை சதுர்த்தசி ஆன மாத சிவராத்திரியும், சிவன் கோயிலுக்கு வகுக்கப்பட்டுள்ளன.

மாதப் பிரதோஷ நாள் (திரயோதசி—13-ம் பிறை நாள் பஞ்சபர்வத்தைச் சேர்ந்ததல்ல. சிவராத்திரி பிரதோஷம் சிவன் கோயிலில் சுமார்த்தக் கலப்பால் வந்த ஆட்சிமுறை போலும். திருமுறைகளில் இந்நாட்கள் அருளப்படவே இல்லை என்பது நினைவில் வைக்கவும். பின் வளர்ந்து விரிந்த ஐந்துவகை சிவராத்திரியில், மாதசிவராத்திரிக்கு, சித்திரை, கார்த்திகை மாதங்களில் தேய்பிறை அட்டமிகளும், வைகாசி ஆவணி மாதங்களில் வளர்பிறை அட்டமிகளும், கொள்ளப் பட்டன. ஆவணி தேய்பிறை அட்டமி, கோகுல அட்டமி ஆகும். ஆவணியில் இதை நீக்கி, மாத சிவராத்திரிக்கு வளர்பிறை அட்டமியைக் கொண்டனர். காள பைரவ அட்டமி என்பது கார்த்திகை தேய்பிறை அட்டமி. இது மாத சிவராத்திரி நாட்களில் கொள்ளப்பட்டது. சனிக் கிழமையில் பிரதோஷ காலம் சேர்ந்து வரும்நாளை சனிப் பிரதோஷம் என்பது போல, புதன் கிழமையில் அட்டமி சேர்ந்து வரும் நாளை புதாஷ்டமி என்பர். கிழமைகளில் நடுவில் இருப்பது புதன்கிழமை; திதிகளில் நடுவில் இருப் பது அட்டமி. திங்கட்கிழமையில் அமாவாசை சேர்ந்து வருவதை சிறப்பாகக் கருதுவது போல, இரு தொகைகளின் நடுவில் இருக்கும் புதன் கிழமையும் அட்டமி திதியும் சேர்ந்து வருவதைச் சிறப்பானதாகக் கருதப்பட்டது. மாத தேய்பிறை அட்டமிகளை 'காளாஷ்டமி' என்றும், மாத வளர்பிறை அட்டமிகளை 'துர்காஷ்டமி' என்றும் பஞ்சாங் கம் கூறும். மத்தியாஷ்டமி என்பது சாந்திரமான மாதங் களில் நடுமாதமான புரட்டாசியில்வரும் தேய்பிறை அட்டமி ஆகும். ஸ்ரீராமநவமி—சித்திரை வளர்பிறை நவமி ஆகும். அட்டமியில் சைவவைணவ சிறப்பு நாட்களின் கலப்பும், அட்டமி சிறப்பாகப் பலவகையிலும் கொள்ளப்பட்டதும் அறிக.

# ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனாரின் மீது
## முத்துசுவாமி தீக்ஷிதரவர்களின் கீர்த்தனை
(நல். மு.)

பிரபல சாஹித்திய கருத்தாவாகிய முத்துசுவாமி தீக்ஷிதரவர்கள் ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனாரின் மீது ஓர் அழகிய கீர்த்தனை இயற்றியுள்ளாரென்பது பலர் அறிந்திருக்க மாட்டார்கள். கீர்த்தனையும் அதன் பொழிப்புரையும் கீழே தரப்பட்டுள்ளன :-

**ராகம் : டக்க.** **தாளம் : ரூபகம்**

ஸுந்தர மூர்த்திம் ஆஸ்ரயாமி
சிவபூசுர குலாப்தி சந்த்ரம் கருணாசாந்த்ரம்
கந்தர்ப்ப விடம்பன விக்ரஹ காந்தீம்
காமக்ரோதாதி ரஹிதோப சாந்திம். (ஸுந்தர)
மந்தஸ்மித ம்ருது கதனம்
மாணிக்ய ருசிர ஸதனம் (ஸுந்தர)
குந்த முகுள நிப ரதனம்
குரு குஹ மோதித கதனம். (ஸுந்தர)

(பொ. - ரை.) சிவப்பிராமணர் குலமாகிய கடலினின்று தோன்றிய சந்திரனைப் போன்ற கருணைவடிவமான ஸ்ரீ சுந்தர மூர்த்தி சுவாமியைத் தஞ்சமடைகிறேன்.

(அவர்) மன்மதனையும் பழிக்கும் அழகு வாய்ந்தவர். காமக்குரோதாதிகளின்றி சாந்தமுடையவர்; முகம் மந்த ஹாசமுடையது; அவர் வாக்கு மிருதுவானது; மாணிக்கம் போன்றது. அவரது பற்கள் முல்லைப் பூக்கள் போல் பிரகாச மானவை; அவர் குஹகுருவாலும் வியந்து பாராட்டப்பட்டவர்!

(குறிப்புரை) இந்தக் கீர்த்தனை எந்த சந்தர்ப்பத்தில் பாடப்பட்டதென்பது விளங்கவில்லை. தீக்ஷிதரவர்கள் நாய னாரிடம் மிக்க பக்தியுடையவர் என்பது வெளிப்படை.

ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் ஸ்ரீ ஞானசம்பந்த நாயனாரை தமது "சௌந்தரிய லஹிரியில்" பின்வருமாறு பாடியுள்ளார்:

தவஸ்தன்யம் மன்யே தரணிதர
கன்யே ஹ்ருதயத :

பய : பாராவார : பரிவஹதி
ஸாரஸ்வதம் இவ
தயா வத்யாத்ததம் த்ரவிட சிசு :
ஆசாத்ய தவயத்
கவீனும் ப்ரௌடானும் அஜனி
கமனீய : கவயிதா !

(பொ. - ரை.) மலை மகளே! தேவரீர் இருதயத்திலிருந்து உத்பவிக்கும் பாட்டு என்னும் கடல், உமது தவஸ்தனங்களிலிருந்து வெளியாகிறது. உமது தயவால் அதை அருள, திராவிட சிசு பருகி, கவிகளுக்குள்ளே கவிராஜனாக விளங்கினார் !

(குறிப்புரை) சில உரையாசிரியர்கள் 'திராவிட சிசுவை' சங்கரர் என்றும், பிரவரசேனர் என்றும் கருதுவதுண்டு. ஆனால் பெரும்பாலோர் ஸ்ரீ ஞானசம்பந்தரையே குறிப்பதாகக் கொள்வர். அம்பிகையின் ஞானப்பால் உண்டவர் வேறிலர்.

சிவபரத்துவத்தை உணரும் பரம சாம்பவர்கள் சைவ சமயாசாரியர்களைப் போற்றி வழி பட்டார்கள் என்பதில் ஐயமில்லை.

---

# சமாஜத் தேர்வுகளின் பாடத் திட்டம்
# இளஞ் சைவப் புலவர்

1. இலக்கணம் : நன்னூல் காண்டிகை (ஆறுமுக நாவலர்) யாப்பருங் கலக்காரிகை, தண்டியலங்காரம் (பொதுவியல், பொருளணியியல் மட்டும்.)

2. இலக்கியம் : திருமுருகாற்றுப்படை, கந்தர் கலி வெண்பா, கந்தர் அனுபூதி, திருக்குறள், அறத்துப்பால் (பரிமேலழகர் உரையுடன்) சுந்தரர் தேவாரம் முழுவதும்.

3. சாத்திரம் : திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், உண்மை விளக்கம், திருவருட்பயன், கொடிக்கவி, வினா வெண்பா,

4. **உரைநடை :** *சைவத்தின் சமரசம் (திரு. வி. க.), வாகீசர் அல்லது மெய்யுணர்தல் (சிவக்கவிமணி), பட்டினத்தார் வரலாறும் நூலாராய்ச்சியும், தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சியும் (கா.சு. பிள்ளை M.A.,M.L.), பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராணவசனம் (ஆறுமுகநாவலர்).*

## சைவப் புலவர்

1. **இலக்கணம் :** *தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்) சொல்லதிகாரம் (சேனாவரையம்) பொருளதிகாரம் (இளம்பூரணம்) தருக்கசங்கிரகம் (சிவஞான முனிவர்.)*

2. **இலக்கியம் :** *பெரியபுராணம் (திருநாவுக்கரசு புராணம் முழுவதும்), சம்பந்தர் தேவாரம் முழுவதும் திருவாசகம் முழுவதும், ஒன்பதாந் திருமுறை முழுவதும்.*

**சாத்திரம் :** *சிவஞான போதச் சிற்றுரை, சிவஞான சித்தியார் சுபக்கம் (சிவஞான முனிவர் உரை), சிவப்பிரகாசம், சங்கற்ப நிராகரணம்.*

4. **உரைநடை :** *சைவ சித்தாந்த ஞானபோதம் (மறைமலையடிகள்), சிவஞான சித்தியார் ஆராய்ச்சி (ந. சிவ குருநாத பிள்ளை) திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே (க. வச்சிரவேல் முதலியார்), சிவஞான முனிவர் உரை நடை நூல்கள், பெரிய புராண சூசனம் (ஆறுமுக நாவலர்).*

## சமாஜத் தேர்வு எழுதுவோர் கவனிக்க :

*தேர்வு எழுத விரும்புவோர் பாடத் திட்டத்திற் குறித்துள்ள நூல்களை நன்கினிது படித்துப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். முதல்வகுப்பில் தேர்ச்சிபெறும் இளைஞர்க்கு அதற்கென அன்பரொருவர் வழங்கிய மூலப் பொருளினின்று வரும் வருவாயைக் கொண்டு பரிசு வழங்கப் பெறும். இளஞ் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் மூன்றும் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் நான்கும் பதிவுக் கட்டணம் ஆகும். விண்ணப்பம் அனுப்பும் இறுதி நாள் 30—9—66. தேர்வு நவம்பர் மாதம் மூன்றும் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும்.*

## சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

27—3—66 ஞாயிறன்று காலை 9-30 மணிக்கு சமாஜ அலுவலகத்தில் செயற்குழுக் கூட்டம் நிகழும். மாதக் கணக்கு சரிபார்த்தல் முதலிய பல பொருள்கள் பற்றிய முடிவுகள் தீர்மானிக்கப் பெறும். உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப் பெறுகிறார்கள். (செயலாளர்)

# சமாஜச் செய்திகள்

27—2—66 நடந்த சமாஜச் செயற்குழுக் கூட்டத்தில் எடுத்த முக்கிய முடிவுகள் பின் வருவாறு :–

1. 1963 ஆம் ஆண்டு மலேயாவில் நடந்த சமாஜச் சிறப்பு மாநாட்டின் நினைவாக மலேயா மக்கள் சமாஜத்திற்கு அளித்த நன்கொடை ரூ. ஆயிரத்தை சமாஜக் கணக்கில் தவணை வைப்பாக வைத்துள்ளது. காலஞ் சென்ற திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்களின் விருப்பத்திற்கிணங்க அத் தொகையிலிருந்து வரும் வட்டியைப் பின்வருமாறு பயன்படுத்துவது என்று தீர்மானிக்கப்பெற்றது :–

ஆண்டிற்கொருமுறை சைவசித்தாந்தத்தில் ஏதாவது ஒரு பொருளைப் பற்றித் தக்க ஒரு அறிஞரைக்கொண்டு சொற்பொழிவு செய்விக்கவேண்டும். அச்சொற்பொழிவை அவ்வறிஞரே எழுதித் தரவேண்டும். அதைச் சித்தாந்தத்தில் வெளியிடுவதோடு துண்டுப் பிரசுரமாகவும் அச்சடித்து விநியோகிக்க வேண்டும். அத் துண்டுப் பிரசுரத்தில் 100 பிரதிகள் மலேயாவிற்கும் அனுப்ப வேண்டும். சொற்பொழிவுகளின் பொருள்கள் பின் வருமாறு இருக்கலாம் :–

1. மாயை மயக்கம் செய்யுமா ?
2. திரோதான சக்தி.
3. தர்மம் பொருளா ?
4. மூலமலம்
5. அறிவும் சுருதியும் முரண்பட்டபோது எதைக் கொள்ளவேண்டும் ?

மேற்கூறிய தவணை வைப்பின் வட்டியைக் கொண்டு சொற்பொழிவாளருக்கு நன்கொடை அளிப்பதும், மற்ற இது சம்பந்தமான செலவும் செய்யலாம், இக்கட்டளைக்கு

'சைவசித்தாந்த மகாசமாஜ மலேயா சிறப்பு மாநாட்டுச் சமயக் கட்டளை'' என்ற பெயரிடுவது என்றும் இத்திட்டத்தை இவ்வாண்டு முதற்கொண்டு ஸ்ரீ மெய்கண்டார் திருநாளை ஒட்டி நிறைவேற்றுவது என்றும் தீர்மானிக்கப் பெற்றது.

2. காலஞ்சென்ற திரு. கா. இராமநாதன்செட்டியார் அவர்கள் விருப்பத்திற்கிணங்க அவர்கள் பணம் ரூ. 660- திரு. கொ. நீ. சிங்காரவேலு அவர்கள் சமாஜத்திற்குச் செலுத்தினர். திரு. செட்டியார் அவர்கள் விருப்பப்படி இப்பணத்தை ஓர் ஆயிரமாகப் பெருக்கி மேற்குறித்தத் திட்டம் போல் ஆண்டு தோறும் ஓர் ஆங்கிலச் சொற் பொழிவிற்கு ஏற்பாடு செய்வது என்று தீர்மானிக்கப் பெற்றது. இக்கட்டளைக்குத் 'திரு. கா. இராமநாதன் செட்டியார் நினைவுக் கட்டளை' என்று பெயரிடுவது என்றும் தீர்மானிக்கப் பெற்றது.

—உதவிச் செயலாளர்.

## ஈழ நாட்டு அன்பர்களுக்கு அறிவிப்பு

ஈழ நாட்டு அன்பர்கள் பலர் சமாஜ உறுப்பினர் கட்டணத்தைப் பல ஆண்டுகளாக அனுப்பாமலே இருக்கின்றனர். இருப்பினும் சென்ற காலத்தின் திறனையும் வருங்காலத்தின் சிறப்பையும் குறித்து இதுகாறும் சித்தாந்த இதழ்களை அனுப்பி வந்துள்ளோம். அவர்கள் தங்களுக்குரிய சந்தாப் பாக்கியை உடனே விரைவிலனுப்பி வைக்க முயற்சி மேற்கொள்ள வேண்டுகின்றோம் எவ்வளவு பாக்கி முதலிய விவரங்களை அவரவர்களுக்கும் தனித் தனியாகக் குறித்து அனுப்பியிருக்கிறது. இனியும் பொறுமையை மேற்கொண்டால் சமாஜம் பொருள் இழப்புக்குள்ளாக நேரிடும் என்பதாலேயே இது எழுதத் துணிந்தோம். விரைவில் ஈழ நேயர்கள் தக்க பொறுப்பேற்று அரசாங்க அனுமதி முதலியன பெற்று சந்தாத் தொகையை அனுப்பி வைக்க ஆவன செய்ய வேண்டுகின்றோம். (துணைச் செயலாளர்)

நம் சமாஜ வயிர விழா மாதர் மாநாட்டுத் தலைவியார் திருமதி இராதா தியாகராசன் அவர்கள் (''மீனாட்சி நிலையம்'', திருப்பரங்குன்றம் சாலை, மதுரை-3) சமாஜ ஆயுள் உறுப்பினராகச் சேர்ந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். (துணைச் செயலாளர்)

## "சமாஜ மணி விழா மலர்கள்"

பிப்ரவரி மாத இதழில் குறிப்பிட்டபடி சமாஜ மணி விழாவில் வெளியிட்ட ஏனைய இரு நூல்களைப் பற்றி குறிப்புக்களைக் கீழே தருகிறோம்.

1. திருவாசகம் ஆராய்ச்சிக் குறிப்புக்கள் (பக்கம் 180 விலை ரூ 2.) சித்தாந்தம் ஆசிரியர் இப்பத்திரிகையிலும் வேறு இடங்களிலும் எழுதிய 20 கட்டுரைகளின் தொகுப்பு; ஆராய்ச்சியாளருக்குப் பெரு விருந்தாய் இருக்கவல்லது. திருஎம்பாவை, பள்ளி எழுச்சி, பொற் சுண்ணம், ஆகிய கட்டுரைகள் யாவரும் படித்துச் சுவை யோடு அனுபவிக்கத் தக்கவை. பள்ளி எழுச்சியின் பொருள், கோகழி பற்றிய தெளிவு, அறுகு பற்றிய உரை, எச்சன்–ஆட்டுத் தேவர் பற்றிய விளக்கம் மிகவும் சிறப் பானவை. தலங்கள், பதிப்புக்கள் என்ற பகுதி மிகவும் பயன் படத் தக்கது. ஏடுகளால் பாடம் நன்கு செம்மை யுறும் என்பது நன்கு தெளிவாக்கப் பட்டுள்ளது, அகத்தி யர் திருவாசக திருவுள்ளக்கிடை அனுபந்தமாகச் சேர்க் கப் பட்டுள்ளது. இப் புத்தகம் திருவாசகம் பயில்வோ ருக்குப் பல இடங்களில் உதவ வல்ல அரிய துணைப் புத்தகம்.

2. தத்துவப் பிரகாசம்: 14ஆம் நூற்றுண்டின் பிற் பகுதியில் மெய்கண்ட பரம்பரையில் வந்த தத்துவப் பிரகாசர் செய்த விரிவான சாத்திர நூல். தத்துவப் பிரகா சம், பழைய உரையோடு, விரிவான ஆராய்ச்சி முன்னுரை அகராதிகளோடு, சித்தாந்த ஆசிரியரால் பதிப்பிக்கப் பட்டுள்ளது; பக்கம் 640. விலை ரூ, 8. இந்நூல் சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று பாதங்களுக்கும் இன்றுள்ள பழமையான ஒரே தமிழ் மூல நூல், ஆசிரியர் இங்கு நூற்றெட்டு ஆசனங்கள் 108 பிராணயாமங்களைக் கூறுகிருர். நூலின் முன்னுரை குறித்த காலப் பகுதிக் குரிய சிறப்பான விளக்கமாகும். இந்நூல் ஐம்பத்தாறு சமய பேதங்களைக் கூறி மறுக்கிறது. இதில் கூறப்பட் டுள்ள தசகாரியம் மிகவும் சிறப்பான விளக்கமாகும். சிவ பூஜை செய்வோருக்கு இது கிடைத்தற்கரிய ஒரே தமிழ் மூல நூல்.

இவ்விரு நூல்களையும் மு. அருணசலமவர்கள் தம் சொந்தச் செலவில் வெளியிட்டுள்ளார்கள்,

# கட்டுரையாளருக்கு அறிவிப்பு

சித்தாந்தம் இதழுக்குக் கட்டுரை எழுத விரும்புவோர் அன்புகூர்ந்து கீழே குறிப்பிட்டவற்றைக் கவனிக்க வேண்டுகிறோம்.

1. சித்தாந்தம் சமயவளர்ச்சிக்கான கட்டுரையையே முதன்மையாய்க் கருதும். திருமுறை, சாத்திரம், தலங்கள் இவை பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும், சமயவளர்ச்சி நோக்கம் கொண்ட கட்டுரைகளும் அனுப்பலாம்.

2. கட்டுரைகளை நல்ல காகிதத்தில் ஓரம் விட்டு ஒரு பக்கத்தில் மட்டும் எழுதி அனுப்பவும். கட்டுரையைத் திரும்பப் பெற விரும்புவோர் விலாசம் எழுதித் தபால்தலை ஒட்டியுள்ள தபால் உறை உடன் வைத்திருந்தால் தான் இது சாத்தியம்.

3. முன்னமே வெளிவந்த கட்டுரை எதையும் அனுப்ப வேண்டாம்.

4. சித்தாந்தம் சமாஜத்தின் வெளியீடு ஆனமையால், அங்கத்தினர் கட்டுரையே வெளியிடப்படும். அங்கத்தினரல்லாதவர் மூன்று ரூபா பணம் கட்டி அங்கத்தினர் ஆவது அவசியம்.

5. கட்டுரை ஆசிரியர் விலாசத்திற்கே அனுப்பவும்.

மு. அருணாசலம்
ஆசிரியர், சித்தாந்தம்
திருச்சிற்றம்பலம்
பந்தணைநல்லூர் வழி,
மாயூரம் தாலுகா.

## மதிப்புரை

இளையனூர் வேலூரில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ பாலசுப்பிரமணியப் பெருமான் திருப்பதிகம் என்னும் நூல் வரப்பெற்றோம். இதன் ஆசிரியர் வாலாசாபாத்து இந்துமத பாடசாலையில் அண்ணாவாயிலங்கும் திரு. கா. ப. தணிகையரசு அவர்கள் ஆவர். இந்நூலில் பதிகம் என்ற பெயருக்கேற்பப் பத்துப் பாக்களும் காப்புச் செய்யுள், வாழ்த்துச் செய்யுளும் ஆக 12 பாக்கள் அடங்கியுள்ளன. திருவாசகத்துக் கண்ட பத்து போன்று "இளையனூர் வேலூரில் கண்டேன் நானே" என்றே ஒவ்வொரு பாவிலும் இறுதியடி முடிகின்றது.

இச்செய்யுள்கள் ஆசிரியரின் நிறைந்த சித்தாந்த அறிவைப் புலப்படுத்துகின்றன. 36 தத்துவங்களையும் முருகப் பெருமானின் சிறப்பியல்புகளையும் நம் சைவ சித்தாந்த நுட்பக் கருத்துக்கள் பலவற்றையும் இந்நூல் சுருக்கிச் சொல்கிறது. ஆசிரியர் அவர்களே, இச்சமயக் கருத்துக்களைப் படிப்போர் தெரிந்து கொள்ளும் வண்ணம், பிற்சேர்க்கையாகக் குறிப்புரையும் எழுதியிருப்பது வரவேற்கத் தக்கது.

9—11—65 அன்று இந்நூல் இளையனூர் வேலூரில் வெளியிடப் பெற்றது. விலை குறிக்கப் பெறவில்லை. கிடைக்குமிடம்:—நா. ப. தணிகையரசு, வாலாஜாபாத் இந்துமத பாடசாலை, செங்கற்பட்டு மாவட்டம். (அம்பை)

குமரகுருபரன் பதினேழாவது ஆண்டு மலர்
ஆசிரியர்: T. M. குமரகுருபரன் பிள்ளை

கிடைக்குமிடம் – குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் (நெல்லை மாவட்டம்) ஆண்டு சந்தா ரூ. 2-25.

குமரகுருபரன் பதினேழாவது ஆண்டு மலர் வரப்பெற்றோம். இம்மலரில் 20 கட்டுரைகள் இலங்குகின்றன. அவற்றில் 5 ஆங்கிலக் கட்டுரைகளும் அடங்கியன. நம் சமயக் கொள்கைகளைப் பரப்புதலையே நோக்கமாகக் கொண்டு இவ்விதழ் நல்ல தொண்டு செய்து வருவது யாவரும் அறிந்த தொன்றாகும். இதிலுள்ள கட்டுரைகள் மிகவும் ஆராய்ச்சியையும், சமய விளக்கத்தையும், சாத்திர, தோத்திரக் கருத்து நுட்பங்களையும் கொண்டன. ஆதலின் சைவராய்ப் பிறந்த தமிழர்கள் யாவரும் படித்துப் பயன்பெற வேண்டும். எல்லோரும் படித்துப் பயனுற திருவருளை வழுத்துகின்றோம். அருள் நந்தியடிகளின் சமயப்பணி சிறக்க வாழ்க. —(அம்பை)

# திருமுருகன் திருவந்தாதி

ஆசிரியர் பிரமபுரம் மா. சோமசுந்தரனார், நூல் கிடைக்குமிடம்: பார்த்தசாரதி, பொருளாளர், நகராட்சி அலுவலகம், வாலாஜாபேட்டை, வ. ஆ. மாவட்டம். விலை குறிக்கப் பெறவில்லை.

இந்நூல் இறைவணக்கப் பாடலுடன் 102 செய்யுட்களைக் கொண்டுள்ளது. சிறந்த ஓசைமிக்க கட்டளைக் கலித்துறைப் பாக்களைக் கொண்டு அந்தாதித் தொடையில் முருகன் பெருமைகளைச் சிறப்புறக் கூறுகின்றது. முருக வழிபாட்டு அன்பர்கள் படித்து உருகி இன்புற ஏதுவாய நூல்களுள் இதுவும் ஒன்றாக அமையும் தகுதியுடைத்து, சிறந்த நயமிக்கனவாகவும் பக்திப்பெருக்கை ஊட்ட வல்லனவாகவும் இப்பாக்கள் அமைந்திருப்பது போற்றத்தக்கதே. அன்பர்கள் படித்துப் பயன்பெறுவார்களாக. (அம்பை)

ஸ்ரீ காசி வழித்துணை விளக்கம். ஆக்கியோன்— சிவகளை மு. சுப்பையா, மயிலம் பொம்மபுர ஆதீன வெளியீடு. நூல் கிடைக்குமிடம்: மயிலம் மடம், தென்னார்க்காடு மாவட்டம்.

விலை ரூ. 1–50.

இந்நூல் மயிலம் பொம்மபுர ஆதீன 18 ஆம் பட்டம் ஸ்ரீமத் சிவஞான பாலயசுவாமிகள் காசி யாத்திரைக்குத் தம் அடியார் குழாங்களுடன் எழுந்தருளிய ஞான்று ஏற்பட்ட அனுபவங்களை நம் தமிழிலக்கியங்களுடன் அவ்வவ்விடங் களில் ஒப்புநோக்கித்துய்த்த திறனைத் தெரிவிப்பது. மேலும் காசியாத்திரை செல்ல விழைவோர் மேற்கொள்ளும் யாத்தி ரைக்குரிய வழிகளையும் விளக்கமாய்க் காட்டுவது, இதனை எழுதிய ஆசிரியர் இவ்விளக்கத்தை மிகச் சுவைபட எழுதி கடித மூலமாய்த் தெரிவிப்பதால் நம் தமிழ் மொழிக்குக் கடித இலக்கியம் குறைந்திருப்பதையும் நிறைவுபடுத்திய பெருமை யைப் பெற்றுள்ளார்.

இவ்வழித்துணை விளக்கத்தைப் படிப்போர் நம் சமயப் பல நுட்பங்களையும் தெரிந்து பக்திவலையில் தோய்ந்து பரவசப் பட்டு இறைவனின்னருளுக்குப் பாத்திரராம் நிலையையும் அடைவர். ஆகவே முத்திநிலைக்கும் இது வழித் துணை விளக்கமாய் அமைந்திருப்பது ஒரு சிறப்பாம்.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் துறைமங்கலம் சிவப்பிரகாசர் பிரபந் தங்களில் மிக ஆழ்ந்து தோய்ந்தவர்கள். ஆகவே அங்கங்கு காணப்பெறும் எடுத்துக் காட்டுகள் அப்பிரபந்தப் பெருமை யையும் நமக்குத் தெள்ளிதின் விளக்கிக் காட்டுகின்றன. இது ஒரு நிலையாய நூல். யாவரும் இன்றியமையாது படித்து இன்புறத்தக்க தொன்று. வாங்கிப் படித்து நூல் நயத்தோடு இறைநலனும் வாய்க்கப்பெற்று இன்புறுவார்களாக.

(அம்பை)

## சைவ சித்தாந்த ஞான விளையாட்டு

ஆசிரியர் : கலாநிதி வ. பொன்னையா,
கிடைக்குமிடம் :— கலாநிதி, வ. பொன்னையா, கொக்குவில், இலங்கை. விலை 35 சதம்.

இது சைவ சித்தாந்தம் பற்றிய ஒரு கைநூல். இந் நூலாசிரியர் இலங்கை யோக சுவாமிகளின் மாணவராதலின் அவர்களிடத்துத் தாம் பெற்ற அறிவை உலகுக்குப் பயன் படுத்துகின்றார். சைவ சித்தாந்த நெறிக்குரிய முக்கிய கொள்கைகளைச் சில தலைப்புக்களாகக் கொண்டு வாழ்க்கைக்கு ஒத்து வரும் நிலையில் பகுத்து ஆசிரியப்பாவில் எளிய நடையில் இந் நூலினை ஆசிரியர் இயற்றியுள்ளார். இது அறிவுரை புகட்டுவது போல விளங்குகின்றது. ஆசிரியரின் முயற்சி மெச்சத் தக்கது. பலரும் படித்துப் பயன் பெறுக. —(அம்பை)

## இராமநாதப் பிள்ளை அறுபதாண்டு நிறைவு விழா :

சமாஜ அங்கத்தினரான கோவூர் க. இராமநாதப் பிள்ளையவர்களின் அறுபதாண்டு நிறைவு விழா, பச்சைப் பதிகம் என்ற சிறப்புடைய "போகமார்த்த பூண்முலையாள்" என்ற பாடல் பெற்ற திருநள்ளாற்றில் 24-2-66 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பிள்ளையினுடைய வாழ்க்கை வரலாறு, இன்றைய நாளில் எல்லா மக்களுக்குமே தெய்வ நம்பிக்கையை ஊட்டவல்லது. அவர்கள் கல்யாணமாகிப் பல ஆண்டுகள் பிள்ளைப் பேறு இல்லாமல் இருந்து, பின்னர் ஒரு பெரியவருடைய உபதேசத்தால் திருக்கடையூர் அபிராமி அம்பிகையை உபாசித்து, அபிராமி அந்தாதியைப் பாராயணம் செய்யும் நியமம் மேற்கொண்டு, அம்பிகையருளால் புத்திரப் பேறு அடைந்தவர் ; அபிராமிகுமார் என்று பெயரிடப் பட்ட பையன் இப்பொழுது பி.ஏ., படித்து வருகிறான். அவர்களுடைய உபதேசத்தால், அதே நியமங்களை மேற்கொண்டு, அனேகர் வாழ்க்கையில் பெரு நன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள். பிள்ளையவர்களுக்கும் அவர்கள் குடும்பத்தாருக்கும் நமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விழா மலராக மு. அருணாசலமவர்களால் அபிராமி அந்தாதி வெளியிட்டுத் தரப்பட்டது. இது எல்லோரும் படிக்கத் தகுந்தபடி சொற்கள் சந்தி பிரித்து நிறுத்தல் குறியீடுகள் பெய்து, அழகுறச் செய்யப்பட்ட சிறு நூல்.

# அமரர் ராம. சொக்கலிங்கம் செட்டியார்

அண்மையில் திருவாளர் சொக்கலிங்கம் செட்டியார் இறைவன் திருவடி அடைந்தார் என்னும் செய்தி கேட்டுச் சைவ அன்பர் பலர் மிக வருத்தமுற்றனர். சைவ உலகத்திற்கு மட்டுமன்றி அரசியல் சமுதாய வட்டாரங்களில் நன்கு மதிக்கப்பெற்றவர். சென்னை சட்டசபையில் உறுப்பினராகவும் காரைக்குடி நகராட்சியில் தலைவராகவும் அவர் பணியாற்றிய காலத்தில் அவர் அளித்த உதவிகளைப் பலரும் போற்றியுள்ளார்கள். இங்குச் சிறப்பாக நாம் கவனிக்கத் தக்கது அவரது சிறந்த தெய்வபக்தியாகும். சைவசித்தாந்த மகாசமாஜத்திடம் நீண்ட காலமாகத் தொடர்பு கொண்டிருந்தார். பாரத சீன யுத்தத்தின் போது நம் நாட்டின்பாதுகாப்பிற்காக சைவசித்தாந்த மகாசமாஜமும் உதவவேண்டும் என்னும் கொள்கையை மிக ஊக்கமாக ஆதரித்து, அவ்வகையில் சமாஜம் யுத்தநிதிக்குத் தொகை அளித்ததில் அவர் சிறப்பாகப் பங்குகொண்டார்.

இராமநாதபுரத்து மாவட்ட சைவ சித்தாந்தப் பிரசாரப் பிரதிநிதியாக சென்ற ஆண்டுவரையிலும் பணி புரிந்துவந்தனர். காரைக்குடி பகுதியில் பலர் சைவசித்தாந்த சமாஜத்திற்கு அங்கத்தினர்களாகச் சேர்ந்துகொள்ளுமாறு ஏற்பாடும் செய்தார். சென்னைக்கு வந்து பல நாட்கள் திருமயிலையில் தங்குவார். அதுசமயம் திருமயிலைக் கபாலீஸ்வரர் ஆலயத்தில் உரிய முறையில் தவருது வழிபாடு செய்வார். ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமைதோறும் நடைபெறும் வாரக்கூட்டு வழிபாட்டில் கலந்துகொள்வார். அவ்வழிபாட்டுச் சொற்பொழிவுகள் சில ஆற்றியுள்ளார். கடைசியாகக் கூட்டு வழிபாட்டு அன்பர்கள் எல்லோருடன் சேர்ந்து ஒரு புகைப் படம் தம் சொந்தச் செலவில் எடுக்க ஏற்பாடுசெய்து அதன் பிரதிகளைப் பல அன்பர்களுக்கு அளித்தனர். கபாலீஸ்வரர் ஆலயத்தோடன்றி சென்னையில் பல பகுதிகளிலும் கூட்டு வழிபாடு ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று அவர் விரும்பினர். ஆனல் உடல்நிலை காரணமாகத் தம் விருப்பத்தை நிறைவேற்ற அவர் முன்வர முடியவில்லை என்பதாகத் தெரிகிறது, திருமயிலைத் திருக்கோயிலில் கூட்டுவழிபாடு தீவிரமாக்கப் பட இப்போது ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது, அவரது நல்லெண்ணத்தின் திண்மையைக் குறிக்கிறது.

அவரது ஆன்மா சாந்தி யடைவதாக! இறைவன் திருவடி நிழலில் அது என்றும் இன்புற்றுத்திளைப்பதாக!! அப்பெரியாருடைய குடும்பத்தினருக்குச் சைவசமாஜம் தன் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அவர்களுக்கு அப்பெருமான் என்றும் அருள் புரிவாராக.

**தலைவர் — சைவசித்தாந்த மகாசமாஜம்**